# PRESS NOTE

Tr.P.Anbalagan, Senior Mechanic, Metropolitan Transport Corporation and former Vice President, Anna Labour Union convicted for three years Rigorous imprisonment for acceptance of bribe Rs.2000/-.

The complainant Tr.S.Purushothaman is working as daily wages driver in Metropolitan Transport Corporation, Central Depot, Pallavan Salai, Chennai-2. It is the duty of branch Manager, MTC Depot to allot bus route for the drivers. On 25.06.2011 morning 09.15 hrs accused Tr.Anbalagan, Senior Mechanic, Metropolitan Transport Corporation and former Vice President, Anna Labour Union voluntarily demanded bribe to allot favorable bus route and using his official influence he demanded Rs.3000/- as bribe for allotting favorable bus route and to cancel the unauthorized leave memo issued to the complainant. The accused also repeatedly demanded bribe and threatened him to transfer to Ennore Depot as he didn't co-operate for his demand. Sequence to this the complainant who was unwilling to give the bribe lodged a petition in SIC, V&AC against Tr.P.Anbalagan on 16.11.2012 at 08.45 hrs, in this connection, a trap was laid on 16.11.2012 at 15.30 hrs and the accused Tr.P.Anbalagan was arrested for demand and acceptance of bribe money Rs.2000/- and sent for judicial custody.

The above said case was in the Trial at the Special Court for Prevention of Corruption Act, Chennai, today (16.12.2022) the Honorable Special Court pronounced judgment against the accused Tr.P.Anbalagan, Senior Mechanic, Metropolitan Transport Corporation and convicted the accused for three years Rigorous imprisonment and fined Rs.2000/-, for committing an offence of demand and acceptance of bribe.

# பத்திரிக்கை செய்தி

**பேருந்து வழித்தடம் ஒதுக்கீடு செய்யவும், குறிப்பாணையை ரத்து செய்யவும் லஞ்சம் வாங்கிய முதுநிலை தொழில்வினைஞர் மற்றும் முன்னாள் மத்திய மாநகர போக்குவரத்து கழகம், அண்ணா தொழிலாளர் யுனியனின் துணை தலைவர் அவர்களுக்கு மூன்று வருடம் கடுங்காவல் சிறைதண்டனை விதித்து சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு.**

கடந்த 07.01.2009 ஆண்டு முதல் சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தில் திரு.புருசோத்தமன் என்பவர் தினக்கூலி ஓட்டுனராக பணிபுரிந்து வந்துள்ளார். ஓட்டுநர்களுக்கு வழிதடம் பிரித்து கொடுப்பது பணிமனை கிளை மேலாளரின் பொறுப்பாகும். சென்னை மாநகர போக்குவரத்து கழக பணிமனையில் பணிபுரிந்து வந்த திரு.P.அன்பழகன், முதுநிலை மெக்கானிக் மற்றும் மத்திய மாநகர போக்குவரத்து கழகம், அண்ணா தொழிலாளர் யுனியனில் துணை தலைவராக பொறுப்பில் இருந்துள்ளார். இந்நிலையில் 25.06.2011 அன்று காலை 09.15 மணியளவில் இவ்வழக்கின் எதிரி திரு.அன்பழகன் அவர்கள் தனது யூனியன் செல்வாக்கை பயன்படுத்தி தானாக முன்வந்து புகார்தாரரிடம் அவர் விரும்பிய பேருந்து வழித்தடம் சாதகமாக மாற்றி தருவதற்கும் மற்றும் புகார்தாரர் அனுமதி இல்லாமல் விடுப்பில் சென்றதற்கு கொடுத்த குறிப்பாணையை ரத்து செய்வதற்கும் ரூ.3000/- இலஞ்சம் கேட்டுள்ளார். புகார்தாரர் இவ்வழக்கின் எதிரி கேட்ட இலஞ்ச பணத்தை கொடுக்க இயலவில்லை என்றால், அவரை எண்ணூர் டிப்போவிற்கு மாற்றிவிடுவேன் என்று தொடர்ந்து மிரட்டியுள்ளார். இதனால் லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவில் திரு.P.அன்பழகன், முதுநிலை மெக்கானிக் மற்றும் மத்திய மாநகர போக்குவரத்து கழகம், அண்ணா தொழிலாளர் யுனியனில் துணை தலைவர் மீது புகார்மனு அளித்தார். இதன் பேரில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு அலுவலர்கள் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு திரு.P.அன்பழகன், முதுநிலை தொழில்வினைஞர் அவர்கள் புகார்தாரரிடமிருந்து லஞ்சப்பணம் ரூ.2000/-ஐ பெற்ற போது கைது செய்தனர். மேலும் இது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கானது சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இன்று 16.12.2022 இவ்வழக்கின் குற்றவாளி திரு.P.அன்பழகன், முதுநிலை தொழில்வினைஞர் அவர்கள் புகார்தாரரிடம் ரூ.2000/-ம் லஞ்சம் கேட்ட குற்றத்திற்கு 1 வருடம் கடுங்காவல் தண்டனையும், ரூ.1000/- அபராதமும், லஞ்சம் வாங்கிய குற்றத்திற்கு 2 வருடம் கடுங்காவல் தண்டனையும், ரூ.1000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.